**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO. I**

**DINDIGUL.**

**STC.No. 658/2025**

**Prosecution Witness : 6**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Name** | : | **நல்லுச்சாமி** | **Caste** | : | |
| **Father's Name** | : | சுப்பையா | **Calling** | : | தலைமை காவலர், தாடிக்கொம்பு காவல்நிலையம் |
| **Village** | : | | **Religion** | : | |
| **Taluk** | : | | **Age** | : | **44** |
| | | | **Dated** | : | **16.09.2025** |

**16.09.2025**

இந்திய பிரமாண வகைமுறைச் சட்டம் 1969 (பிரிவு 4) – ன் படி சாட்சிக்கு சத்திய பிரமாணம் செய்யப்பட்டு பிரமாணத்தின் பேரில் சாட்சியின் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

பட்டியல் சாட்சி– 11 திரு. நல்லுச்சாமி ஆஜர். பிரமாணம் போதிக்கப்பட்டு அ.சா.3 ஆக முதல் விசாரணை செய்யப்பட்டார்.

**<u>எதிரி ஆஜர்</u>**.

1. நான் தற்போது திண்டுக்கல் தாடிக்கொம்பு காவல்நிலையத்தில் தலைமை காவலராக பணிபுரிந்து வருகிறேன். இதற்கு முன்பாக திண்டுக்கல் தாலுகா காவல்நிலையத்தில் தலைமை காவலராக பணிபுரிந்தேன். கடந்த 10.03.2025 ம் தேதி நிலைய அலுவலில் இருந்தபோது திண்டுக்கல் சாணார்பட்டி அஞ்சுகுழிபட்டியை சேர்ந்த சக்திவேல் மனைவி பஞ்சவர்ணம் நிலையம் ஆஜராகி கொடுத்த புகாரை பெற்று நிலைய குற்ற எண்.136/2025 U/s 281, 125(a) BNS ஆக வழக்கு பதிவு செய்து அதன் அசல் முதல் தகவல் அறிக்கையும், புகாரையும்

இணைத்து கனம் நீதித்துறை நடுவர் எண்.1 நீதிமன்றத்தில் மற்ற நகலை சம்மந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அனுப்பி வைத்தேன். வழக்கு கோப்பை மேல்விசாரணைக்காக சார்பு ஆய்வாளர் பார்வைக்கு வைத்தேன். சார்பு ஆய்வளர் வழக்கு சம்மந்தமாக என்னை விசாரித்தார். **முதல் தகவல் அறிக்கை அ.த.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை – இல்லை.</u>**

taken down by me in open court read over to the Witness in the presence of the accused interpreted to him Tamil and admitted by him to be correct.

PACKIARAJ

Digitally signed by PACKIARAJ
Date: 2025.09.16 17:54:16 +0530

Judicial Magistrate No.I

Dindigul.